உ

பிள்ளையார் அகவல்

# வைரவர் காவியம்



ஆக்கமும் தொகுப்பும்:

கலாபூசணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பிள்ளையார் அகவல்


# வயிரவர் காவியப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பாலும் தெழி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தழிழ் மூன்றும் தா.

## பிள்ளையார் அகவல்

# வைரவர் காவியப் பாடல்கள்


தொகுப்பாசிரியர்
புலவவர் நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு



முதற்பதிப்பு : 15.09.2009
மூன்றாம் பதிப்பு : 10.09.2017

விலை 300




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

**பெரியார்களே!**

இத்தெய்வவழிபாடு காலத்தால் முந்தியதும் கோயில் வழிபாட்டுக்கு முன் இல்ல வழிபாடாகவும் காக்கும் தெய்வமாகவும் மக்களாள் போற்றப்பட்டு வந்தது எனலாம் இச்சூலாயுதம் சிவசக்திற்கும் சிவனுக்கும் உரித்தானதால் சிவமாகிய வயிரவக் கடவுளுக்கு சூலத்தை நிறுத்தி மேடையிட்டு பந்தல் போட்டு ஆண்டுக் கொருமுறை படையல் செய்தால்நம் மனை வளவுகளில் துக்ஷ்ட தேவதைகள் அனுகாமல் நோய் பிணிகள், இடர்கள் வராமலும் தடுக்கும் சக்தி இவ்வயிரவ சாமிக்கு உண்டு எனலாம்,

இவ்வயிரவ பூசை வெள்ளி திங்கள் கிழமைகளில் முற்சாமத்தில நடைபெறும்.வீட்டுக்குஎதிராக பந்தலிட்டு தென்னங்குருத்தால் சோடினைசெய்துபாழை நட்டு வெள்ளை விரித்து இளநீர் குரும்பையை இருபக்கமும் வெட்டி திரு நீறு மஞ்சள் குங்குமம் பூசி சூலத்திற்கு முன் வைத்து பழம், பாக்கு, வெற்றிலை பரப்பி மொந்தன் பழம் ரொட்டி கிழங்கு வகை அவித்து வைத்து பொங்கள் படைத்து சாம்பிராணிகுங்கிலதூப தீபம் காட்டி முன்பிள்ளையார் அகவலும் பின் வயிரவர் அகவல் காவியம் பாடி பூப்போடுவதுடன் வயிரவ பூசை நிறைவு பெறும்.

**அன்பர்களே!**

அப்பூசை விதி பூசகர்களது வாயிலாகவே பேணப்பட்டு வந்ததெனலாம் மற்றும் பூசகர்கள் அருகிவருவதாலும் விதி முறை தெரியாமலும் எமது கிராம கலாசாரங்களும் மறையஇடமுண்டு.எனவே எமது இளைய தலை முறையினராவது இந்த அகவல் காவியங்களைப் பாடித்தங்கள் தங்கள் வீடுகளிலே இவ் வயிரவ பூசை செய்ய இப்புத்தகம் ஏதுவாய் இருக்கும் என நம்புகிறேன்.

மேலும் இப்புத்தகம் வெளிவர தங்களின் ஊக்கமும் பெரியோர்களின் நல்லாசியும் இறைவன் துணையும் எனக் கூறிக்கொண்டு இதை வெளிக்கொணரும் திரு நீலகண்ட தேவஸ்தான அறப்பணி யினருக்கும், எனது மகன்மார்களுக்கும், பாடுகின்ற தங்களுக்கும் ஆதி வயிரவசுவாமியின் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

சேனைக்குடியிருப்பு
15-09-2007

*வணக்கம்*

*அன்புடன்*
*இறையன்பன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிள்ளையார் அகவல்



திருச்சிற்றம்பலம்

ஓம் அரிபிரமன் தேடரிய அம்பலவன் திருமகனே
கடிய வினை தீர்த்தருளும் கணபதியை நாள்தோறும்
விடியமுதல் எழுந்திருந்து வேழமுகவிநாயகனைப்
புதிய மலர் பறித்து பூவினுடன் நீர்தெளித்து
அடிபணிந்து நமஸ்கரித்து அன்புடனும் அனுமான்றன்
பெரிய வன்றன் திருமகனே பிள்ளையே கணபதியே
மாயவன்றான் மருகோனை வல்வினைகள் திர்ப்பவனே
ஆங்காரமெல்லாம் அவனிடத்தில் சேர்ப்பவனே
சாங்காரம் கைக்கொண்டு தன்னிடத்தில் நிற்பவனே
பொழுதொரு நாள் மறவாத புண்ணியனை நினைந்து கொண்டு
காதலித்து நெஞ்சுருகி க் கண்களெள்ளாம் கழி கூர்ந்து
சிவனருளை சேர்த்துக் கொண்டு கற்பகமாய் வந்தெமக்கு
கருத்தை எல்லாம் தருபவனே
மெய்ப்பொருளாய் வந்தெமக்கு வினைகள் தீர்த்து அருள்பவனே
தனி வழிக்கு துனையான தண்டைக் கால் அழகியனே
பெருவயிறுக் கணபதியைப் பிள்ளையான் மறப்பதில்லை.
கயிலை பொழி திருமுகமும் கமலத்துயர் வாயும்
நின்றிலங்கிய நீறும் நீறுலங்கிய நெற்றியும்
குண்டலமும் குளகாதும் கூடியதோர் கொப்பிரண்டும்
அண்டரெல்லாம் வங்திங்கு அடிதாழவே
அஞ்சாதே என்றுபெருஞ்
செம்பொனினால் அமைந்த சீருடை பூனூலும்
மன்னென்னுமது வறுண்டை அழகிய தோர் செவ்வாயும்
எங்களிட கண்முன் எழுந்தருள வேண்டும் சுவாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

விண்ணவர்க்கு விண்ணவனே வேதியர்க்கு வேதியனே
உன்னரிய பெரும் புகழால் உகந்திருக்கும் ஐங்கரனே
வேலுகந்த முருகனுடன் விண்ணுலகம் சூழ வந்து
ஈசுரனை வலமாக வந்து அரனொடியில் பழம் வாங்கி
ஆரமாய் அமுது செய்யும் ஆனை முகத் ஐங்கரனே
புலியுர்த்தி மளுவேந்தும் புரிசடையோன் புரியணிந்து
வளுவரக்கன்தன்னை வதைத்து மலர் மகளை இடம் தரித்து
நந்தி உயிர் பேர்த்த சதுர்முகனை தலையரிந்து
பெலியுகந்து பிட்டுக்காகப் பெருங்கூட மண் சுமந்த
மாறன் கை அடிபட்டு வேடனெச்சி திண்டு மேனி எல்லாம் நீறணிந்து
நெடுங்ஞ்சுடலை தன்னில் ஆடி பார்த்தன் கை அடிபட்டு
பரிவாய் எருக்கம் பூமாலை கோர்த்து
சிரல் அணிந்தவன்றன் சாலை எனும் கணபதியே
கற்பகமே மான் பயின்ற புனக்குறவர்
வளர்தெடுத்த மொழிமாதைத் தேடி
ஆண்டி என வந்து அமுதரி ந்து நீர் குடித்த
மீண்டும் அவளுடனே மின்களெள்ளாம் தோள் பணிந்து
ஆனதொரு மரமாகி அருவேடன் வடிவு கொண்டு
ஆண்டுகந்து வள்ளிதனை அறுமுகனார் அணைவதற்கு
சென்று நின்று உனை நினைக்க சீக்கிரத்தில் ஓடி வந்து
கந்தனுக்கு உதவி செய்யும் காரணனே கரிமுகனே
ஆயிலையில் அமர்ந்த அக்கினி முனியை ஏரி செய்து
பஞ்சவர்க்குத் தூதாகிப் பார்த்தனுக்கே தேரூந்து
அஞ்சவே தேத்தரசன்அவனுயிரைக் கொல்லுவித்து
சிலைமிகுந் த விதுரன் கை சிலை தனை முறிப்பித்து
மதமிகுந்த கும்பகர்ணன் மாழவொர கணை தொடுத்து
காளி என்றன் சென்னியிலே கருதி தடம் புரிந்து
சிங்கமுருவாய்ச் சின்னமாய்ச் சங்கேந்தும் மாயன் மருகோனே
ஜெகமுழுதும் மெஞ்ஞான மூவாறு கருணையும்
தந்தருளும் சொற்போன தெய்வேந்திரா
உன் அருளைப் பாடலூற்றேன்
முற்பயின்றவினை தீர்க்கும் முன்னவனே பெரியவனே
அற்புதமாய் வந்தெம்மை ஆளும் ஆனைமுகத்தைங்கரனே
*உன் பாதம் நமஸ்தே நமஸ்தே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேறு

ஓம் அரியச் சரத்தில் அமர்ந்திடும் சோதி
கரியென வந்தென்னை காத்திடும் சோதி
மாமறக் கண்ணென வருமகா கணபதி
தாமரைக் கண்ணொளி தங்கிய கணபதி
திருபுரமெரிக்க சிவன் பெறு தரிசனை
வருமாட்சரத்தில் பம்பரமானவா
எஞ்சாசரத்தில் ஏளையங்கிரங்குவாய்
தெள்ளிய வேடர் தினைப்புனம் தன்னில்
வள்ளியை வேலர்க்கு மனைவியாய் சேர்த்தவா
குறுமுனிமண்டலம் குறுகியபுன்னை
அழவுரு கொடியதாய் அளவினில் வழர்த்தவா
ராவணண் கொண்டு வரும் லிங்கம் தன்னை த்
தாவென வாங்கி தரையினில் வைத்தவா
அரனுமைவலமாய் வந்தரிய மாங்கனியை
விரைவுடன் வாங்கி வேழமாமுகவா
சடைதனில் இருக்கும் சந்திரன் தனக்கு
அடைவுடன் சாவம் அருளிய கரிமுகா
ஒரு கையில் பாசம் ஒரு கையில் மோதகம்
ஒரு கையில விழாங்கனி
ஒரு கையில் அங்குசம் மறு கையில் அப்பம்
ஐந்து கரத்திலும் அன்புடன் எடுத்து
அடியவர் வினையை அகற்றிடும் சோதி
அன்பர்களிடும் பூசையை இன்பமாய் உகந்து
ஈரேழு லோகமும் எங்குமாய் நின்றதோர்
எலியாகிய பிஞ்சகா சரணம்
எம் வறுமை எம் பிணிகள் உம்மைக் கண்டோட
எங்களுக்கு அருள்புரிவாய் ஏகவினாஜகா
ஆதி ஒழிவானவா எங்களுக்கு அருள் புரிகுவாய்
என்ன பிழை செய்தாலும், உன்னையே துதி செய்தோம்
எப்பொழுது உன் கிருபை தா ஓவதூர் பாரிவளர் பூசை செய்
துன்புகள் நம்பினோம் கடரகரிமுக வரதனே
உன் பாதம் சரணமே சரணம்தாணே

*பிள்ளையார் அகவல் முற்றிற்று*
*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வயிரவர் துதி

திருச்சிற்றம்பலம்



*பரமனை மதிப்பிட்டாய் பங்கயாசனன்*
*ஒருதலைக் கிள்ளியே ஒழிந்த வானவர்*
*குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்*



திருவருள் கருணை செந்தாமரைக்கண்ணன்
அரி யென வணங்கும் அர்ச்சன ரூபன்
ஏகபூரணி இமையாள் கிருபாகரி
வேத நாயகி விளங்கு முக்கண்ணி
ஆவணி ஆண்டிட அகமிக மகிழ்ந்தது
புவனேஸ்வரி தன் கிருபையினாலே
படி எனப் புகழும் பராக்கிரமாகி
உம்பர்கள் போற்றும் உறுதியாய் வெற்பில்
கொம்பினால எழுதும் குஞ்சரக் கன்றே
கற்பக கடவுள் கருணை போன்றுதவும்
அற்புதமிகுந்த ரட்சுதவாகனா
செஞ்சொல் மதுரை செந்தமிழ்ப்பிரியா
காஞ்சூரவயிரவக் கடவுளே உதவு
வடுகர் குலஞ்ஞர் மறவினாவல்லி
கொடியுடை குமரா குருபரா உதவு
உத்தண்ட பத்திரகாளியே உதவு
வடிவுடன் எவர்க்கும் மகவது கொடுத்து
பழுதிலா தனையேன் பரிவு போற்றுதவு
முப்பத்து முக்கோடி தேவர்களை வணங்கும் காலவயிரவா
கானலில் இருக்கும் கம்பிளி வயிரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிர் தருகூர் அகோர வயிரவா
சோதிபோல் எமக்கு சுடரொளியாகி
வைத்திடும் பூசையை வளமாய உகர்ந்து
சித்தி தந்தருளும் சிவனே சிவாய வயிரவக் கடவுளே
சிவ சிவ சரணம் சிவாவாய சரணம்
ஆதி வயிரவ ஜயனே உந்தன் அடைக்கலாம் தானே
வீரச்சடையும் விளம்பிய கண்ணும்
பார்ப்பகடும் பசும்பொன் மேனியும்
நெற்றியில் யனமும நீலகண்டமும்
பல்லும் முகமும் பவள வாய் அழகும்
ஏரிட்ட பார்வையும் எதிரிட்டசூலமும்
வச்சிராயுதமும் மளுவுமிலங்கை
நாய் வாகனத்தில் நற்புடன் ஏறி
எண்டிசை எங்கும் ஏக ரூபமாய்
வந்தருள் புரிவாய் வயிரவ தேவனே
உன்பாதம் நமஸ்தே நமஸ்தே
கோழியும்ஆடும் குதிரையும் உண்டு
இரத்த வாயும் எக்கிய வயிறும்
கடித்த பல்லும் காலகண்டமும்
குழிர்ந்த பார்வையாய்க் குணமுடன் வந்து
சிந்தையில் அடியேன செய்பிழை பொறுத்து
வந்தருள் புரிவாய் வயிரவ தேவனே
உன்பாதம் நமஸ்தே நமஸ்தே

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

ஓம் நமோ வயிரவா உக்கிரமான ஓங்கார வயிரவா
அக்கரவணி தந்து ஆடிய வயிரவா
பேயுடன் சுடலையில் ஆடிய வயிரவா
நாய் வாகனத்தில் ஏறிய வயிரவா
நரசிங்க ரூபம் தரித்தவயிரவா
இரதணியன் தன்னை கிழித்த வயிரவா
ஏக முகமாகி எழுந்த வயிரவா
ஆதகமங்கடலைக் கடந்த வயிரவா
அக்கினியாகம் அழித்த வயிரவா
தக்கன் தலையை அறுத்த வயிரவா
சங்காரரூபம் தரித்த வயிரவ நாதர்
வருகின்ற வடிவை பாராய் பாராய்
மானொருகையும் மழுவொரு கையும்
சங்கொருகையும் சக்கர மொருகையும்
தேவர்க்கெறியும் திரிசூலம் ஒருகையும்
இப்படி பதினெட்டு ஆயுதம் எடுத்துப்
புறப்பபட்டான் ஆதி வயிரவன்
தண்டையும் சிலம்பும் சலசலவென்றொலிக்க
பந்திக்கு வீரர்கள் சேசே என்ன
பக்க வீரர்கள் சங்கு நாதிக்க
துர்க்கை துந்துமி ஆடி நின்று கை கொட்ட
பத்திரகாளி பார்வதி சிவகனங்களெள்ளாம்
சென்று போற்ற மண்ணதிர விண்ணதிர
ஈரேழு பதினாறு உலகமெல்லாம் கிடுகிடென
நடுநடுங்கச் சத்தா சமுத்திரம் சடசடவென்றசைய
அட்ட குலவெற்பு அசைந்து நடுங்கிட
பட்ட பத்திரர் பயந்து நடுங்கிட
காளியை கூட நடத்திவா வயிரவா
காடேரியை கட்டி இழுத்து வா வயிரவா
இருள மருளனை அழைத்து வா வயிரவா
எக்கலா தேவியை இழுத்தெறி வயிரவா
எட்டுத்திக்க பதினாறு கோணத்திலுமுள்ள
துட்ட தேவதைகளை துரத்திடு வயிரவா
கால வயிரவா வாவா கபால வயிரவா வாவா
நீல வயிரவா வாாவாநிர்மான வயிரவா வாவா
இரத்தங்குடித்து இரணப்பெலியுண்ட
இணக்க வயிரவா வருக வருக
உன்பாதம சரணமே சரணம்தானே.

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேறு

சீர்புகழ் வயிரவர் செந்தமி ளுரைகக்க
கார்புகள் மேனிக் கணபதி யருளே
ஆதி பராபரி அருளிய நூதல் விழி
சோதிபோல் எழுந்து சுடரொளியாகி
வீதியி லெழுப்பி விசும்பலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சாடனமாய்
ஓங்கார ரங்கொண் டொருமகமாகி
ஆங்கா ரங்கொண்டொருமுகமாகி
அக்கினிச் சொருப வனபல கதிராய்
விக்கினம் தீர்க்கும் விறும வயிரவா
அப்பமும் அவலும் மாலங் காயும்
செப்பிய மாங்கனி திகழ்த்தட் டுறட்டியும்
தேங்கதலிபழமும் செப்பிய பலாப்பமும்
அத்தனை யெல்லாம் அருந்திய வயிரவா
ஜயுங் கிலியு மகோர வயிரவா
சவ்வுய் கிலியும் சங்கார வயிரவா
சிறியும் கிலியும் ஏறு வயிராவா
மௌவுங் கிலியு மான வயிரவா
முச்சூல வயிரவா முக்கண சொருபா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்தியோ டருள் புரி தற்பரனாகி
பாம்பெலும் பணிந்த பராபர வஸ்துவாய்ச்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்
சுடலையில் நின்ற சுடலை காத்தவனே
கொங்கைக் கரைரயிற் கிரபாகரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னில் பூசல் புரிந்து
ஆலை நிழலி லமர்ந்தறை சிவனே
பாதகக் கொலிசு பளபளென் றிசைப்ப
நாதவீணைகள் நலம் பெற விளங்க
ஆதி சிவனோ ரருள்புரி வயிரவா
செம்பொன் மேனியுந் திருநீற் றழகும்
உச்சிக் குடும்பியும் உதிர வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலறிய பல்லும் அண்ணார்ந்த பார்வையுங்
காலிற் றரித்த தண்டை பாதமும்
கழுத்திற் கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த சண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யாணமும்
அங்கம் முழுதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச் சடையிற் குலாவிய பிறையும்
பச்சை மேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடும்பியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவ்வேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப்பசாசைப் பறக்கத் துரத்தி
எற்றி மிதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே உந்தன் அருளுண்டானால்
வையகப் பிணிபேய் வாதபித்த கபம்
துய்யவி யாதிகள் தூள்போற் பறக்க
எதிர்க்கும் வியாதியை இருள்போல் வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தெழுத் துச்செபித் தன்போ டரனே
நம்பினே னுன்னை நமக்கருள் தருவாய்
கரிமுக முடைய கற்பகா வருள்தா
திருவருள் புரியுஞ் சிவனே யருள்தா
பார்பதி யிடமுறை பரனே யருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக் குண்டெறிந் தவனே
அன்பாய் வந்த அடியேன்செய் பூசையை
நம்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனக பாலமு மழகிய பிரம்பும்
ஞானபூராணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்ந்த மார்பில் தனியொளி காட்டி
எங்களை யிரட்சித் தருள்வாய் போற்றி
இன்பமாய் வந்து யான் செய் பூசையை
நண்பாய் யேற்பாய் நமஸ்தே நமஸ்து.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி வயிரவர் துதி



தேவர்கின் னரர்முனிவர் சித்தர்கண நாதர்
ஜெயஜெய வெனப்பாவிந் தேயடியி றைஞ்ச
ஆவதனி வேறுபர னுஞ்சுடலை தன்னில்
அரியதொரு கங்காள வேஷமது கொண்டு
பூவுல கதிரவே தில்லைநட மாடும்
பூவனே முச்சூல மும்பிடித் தவனே
காவல னேமனமி ரங்கியருள் புரிவாய்
கங்காள தேவனே ஆதிவயி ரவரே.

ஆதிதரு வில்லம்பு வல்லயஞ் செல்லை
அழகான மழவீட்டி திரிசூலம் வாளும்
நீதியுட னேதரித் தேபரிக லத்தினொடு
நீடுபுகழ் தக்கனிட யாகம் தழித்த
சோதியே சுடலைதனி லாடுபர னாரின்
துய்யசுத னெனவந்த தூமறைப் பொருளே
ஏத்திய வெள்மவிடை மீதெழுத் தருளி
என்முன்னே வந்தருளு மாதிவயி ரவரே.



யவ்வென்று மௌவென்று மினியமறை யென்று
ஏகமாய் நின்றபர நாதனாய் வந்து
சௌவென்று நானென்று சகலதற் பரமென்று
தானென்று நானென்று சகலகலை யாகி
உவ்வென்று முயர்மறைப் பொருளதாய் நின்று
உமையொரு கங்காள வேஷமது கொண்டு
யவ்வென்று முச்சுடலை யாடிவினை தீர்க்கும்
வங்ஙவடு காயவெனு மாதிவயி ரவரே.

## திரு நீறு போட

*ஓம் சிவப்புரு வடுகநாதா ஆகாச வடுகநாதா உன் குருக்கள் காளமாமுனி தன்னாணை இவரைப் பிடித்த கண்ணூறு நாவூறு காய்ச்சல் கறுப்பு பேய் பிசாசு பில்லி வஞ்சனை சூனியங்களையெல்லாம் இத்திருநீறு கண்டவுடன் அறுபட்டு தெறிபட்டுப் பூந்திறங்கி பூமியில் குதித்துப்போக வேசுவாக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வயிரவர் காவியம்

திருமருவு பரனுதவு ஆதிவயி ரவர் மீது 01
செந்தமிழ்ப் பாமாலை செப்புதற்கேதான்
குருமருவு விகடதட கரிமுகவ னேயுனது
கமலமல ரடியிணைக ளதனை நினைவுறவே
மரவுதர வரசனும் பிரம்மனுட னுறையும்
மாதுகலை சரஸ்வதியு மனதினு ளிருக்க
அருமருவு வடுகனெனு மொரு கடவு ளுனதுதிரு
அடியினைக ளொரு போது மனதினில் மறவேனே.

மறவாம லருள்தில்லை மன்றுள் நின் றாடி 02
மனுவோர்கள் பிணிதீர வருவோர் நீரலவோ
குறமாது வனை மேவு குகனோடு பொருசூரர்
குலம்மாள வேலேவு குமரவே ளலவோ
வழறமாக வருகாளி திரிசூலியுடனோடு
சிவனார்த்தன் மகனாக வருவோர் நீரல்லவோ
இறவாத முனிவோர்கள் தொழமேவு கயிலாய
மணிவாச லுறையீசர் புகழோதுவோமே.

ஓதுமோங் காரமுக் கோணேசற் கோண 03
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்று
மாதுசந் தரிகாளி யுடநடன மாடிவரு
வயிரவ சொருபனென வருபரா பரனே
பாதுகாத் துலகங்களெங்கணும் நின்று
பலம் பேரிடும் பூசை வேள்விக ளுகந்து
காதிலிரு குண்டல மணிந்து வரு கின்ற
கருணை பெரு நூற்றெட்டு வயிரவரும் நீயே.

நீயே றிங்ஙாச னத்தினி லிருந்து 04
நின்னருள் புரிந்துபூ லோகந் தழைக்க
நீயெயீ ரேழு அண்டம் பயம் கொள்ள
நின்றுதான் முப்புர தைத்தகன மாக்கி
நீயே மதன்றனை எரித்து முக்கோடி
நிலையான தேவரை யழித்தவனும் நீயே
நீயேவெண் ணீறனிந்த தேசுடலை நின்றாய்
நித்தவே கத்தனே நிலவுபுனை வோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுபுவனை குலவுசடை யோனுருவமாகி 05
நிறுமான வயிரவர் சொருபமென வந்த
அலகுசூ லாயுத கபாலமு மேந்தி
ஆதி வயிரவராகி வந்த மெய்ப் பொருளே
குலவுவெள் ளிலைசெங் கரும்பினோடு பூமடல்
குங்கிலிய தீபமொடு செங்கமல மலரும்
இலமுகில் சந்தனங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ருடன் மடைக ளேற்றுகந் தவனே.

ஏற்றுநீ ரட்ட வயிரவராகவே வந்து 06
எங்கனும் பலபூசை வேள்விகளுகந்து
காத்தநீ கங்காள வயிரசொ ரூபமொடு
கருணைபெரு நூற்றெட்டு வயிர வருமாகி
பாத்து நீ யுலகமதி லெங்கும் பரந்து
பலிகொண்டு துர்க்கைக் களித்தவரும் நீயே
வேற்றுருவ தாகவே வந்தேழு கன்னியை
மணம்வேட்டு மென்மை பெறு விறுமவயி ரவரே.

வயிரவ சொருபமென வந்ததற் பரனே 07
வடுக வயிரவரென வுதித்தசு தரனே
எயிர வனத்தில் வரும் பூத பசாசுகளை
ஏறிசூலம் வேள்விட் டெறிந்தவரும் நீயே
பயிரவி யுடன்சமய மாகிநின்றவனே
பலவேச வுருவாக வுலவுதற்பரனே
உயிரும உடலும் பொருளு மாகிநின்றவனே
உத்தண்ட ஆதிவயிரவவராணப் பொருளே.

பொருளான ஆதிசங் காரா சிவாநம 08
போகாத பிணிதொலைத்தவனே சிவாயநம
இருளான ரெத்தவயி ரவரே சிவாயநசம
வீரேழு புவனமு நிறைத்தாய் சிவாய நம
அருளான ஆதிசங்கரா சிவாய நம
அன்பர்க்கு அன்பான ஆதி சிவாயநம
மருளான உத்தமத்த வயிரவ சிவாயநம
மண்டலத்தோர்புகழ நின்றாய் சிவாயநம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாயறீங் காரமென வந்ததவோங் கரனே
சித்திதரு நித்தியம தான சங்கரனே
உபாயமது செய்வதற் கேயுதித்தவனே
உண்டென்ற வர்ககுதவு முண்மை நாயகனே
நவாயமெனு மட்சரம தாகிநின் றவனே
நான்மறைகச ளும்புகழும் நடுவான தேவனே
மவாயறீங் காரவோங் காரத்து நித்தமெய்ப்
பொருளாகி நின்றதொரு ஆதிவயி ரவரே.



ஆதியே எங்களை யிரட்சிக்க வந்தநீ
அண்டபகி ரண்டமு மடுக்காய நிறைந்தநீ
சோதியே சுடரொளியதானதொரு கடவுள்நீ
துட்டவயி ரவர்கோடி சூளவரு பவருநீ
நீதியே யுந்தன்னை நினைப்பவர் தனக்கு முன்
நிற்குமத கரிகளொரு திக்கிலோ டாதோ
ஊதிபம தானதொரு கண்கண்ட தெய்வமே
உன்னருள் புரிந்தருள் முண்மை நாயகனே.

நாயகம தானதொரு நாதா நமோநமோ
நாடுபுவ னம்களும் நிறைந்தாய் நமோநமோ
தாயான ஆதிசங்கரா நமோநமோ
சதுர்மறை புகழ்ந்தவயி ரவரே நமோநமோ
பாய்பரிகள் தலையிடற வருவாய் நமோநமோ
பாலருகி லதிகதே வதையே நமோநமோ
நாதனே யென்பிழை பொறுப்பாய் நமோநமோ
நாதாந்த ஆதிவயிரவதேவ தேவனே.



நமசிவா யப்பொருள தானவரும் வாழி
நான்மறைகள் வாழிசர சோதிமிக வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
நித்தியகல் யாணிபத் திரகாளியும் வாழி
நமதுகட கரிமுமகவர் பாதமலர் வாழி
நங்கை தெய் வானைமண வாளனும் வாழி
உமதுபுகழ் புவிமீதி லோதுவோர் வாழி
உத்தண்ட வயிரவர் வாழவா ழியதே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிரவர் தலாட்டு

ஓங்கார முக்குகோணம் ஆதி வயிரவரே உபாயத் தொழிளாழி.
ஆங்கார சக்திபெற்ற ஆதிவயிரவனே நீ ஆனைமுக வேதியனே.

றிங்கா சனத்திருந்து ஆதிவயிரவனே திருப்பூசை கொண்டவனே.
பாங்காக வேதான் ஆதி வயிரவனே பாதரிக்கும் பூசை கொண்டாய்.

வான மழாதிடஆதி வயிரவனே வந்தேறு இம்மடையில்.
ஆனையடி போலே ஆதி வயிரவனே அறுபதாம் தட்டுறட்டி.

ஈசனார் புத்திரனே ஆதி வயிரனே நீயிருந்துபெலி தானருந்தி.
ஆகாச காளி ஆதி வயிரவனே ஜயன் பிடாரிகளை.

காயாமலர் மேனியனே ஆதிவயிரவனே கைச்சூலந் தானேந்தி .
சவ்வுங் கிலியும் ஆதி வயிரவனே உடன் வந்து பூசைகொள்வாய்.

மவ்வுங் கிலியும் ஆதி வயிரவனே வந்தருள வேனுமையா.
உவ்வும் சவ்வுமென ஆதி வயிரவனே உனது மலரடிக்கு மங்கயமே.

சரணம் சரணமையா ஆதி வயிரவனே உன் தாழினையே சரணமையா
மங்களம் மங்களங்காண் ஆதி வயிரவனே உனது மலரடிக்கு மங்களமே.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையும் நின்னைந் தெழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் இறைவா கச்சியே கம்பனே.

வான்முகழ் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூப்போடுதல்

ஆதி வயிரவக் கடவுளே உனை நினைத்து பூசை செய்கிற
மக்களுக்கும் இந்த மண்டியிலுள்ள பெரியோர்கள்
சிறியோர்க்கும் ஒரு நோய் துன்பம் இல்லாமலும் இம்மனையில்
துஸ்ர தேவதைகள் அணுகாமலும் பில்லி வஞ்சனை சூனியம்
நெருங்காமலும் துணை நின்று வருடா வருடம் உனை
நினைத்து விளக்கீடு செய்யும் இவ்வடியார்களைக்காக்க
வேண்டியது உனது கடனப்பா அனைவரும் உமக்கே
அடைக்கலம் உன் தாழ் சரணம் சரணம்

*ஓம் சிவம்*

## கால வயிரவர் காய் வெட்டு

ஓம் கடுகுடு தேவ தாவா இரணப்பெலி மாடா கம்பிளி வயிரவா
நீ ஒரு கால் கீழும் ஒரு கால் மேழுமாக நின்று
அரிய தவம் செய்கின்ற போது
ஆதிபரமேஸ்வரனுக்கும் ஆதிபரமேஸ்வரிக்கும்
வந்து உனக்கென்ன வரம் வேணுமெனக் கேட்கின்ற போது
கட்டி இருக்கின்றான் கவலைப்படுகின்றேன்
கட்டை விடு விடு கால வயிரவா கிட்டிப்பார் கிரணங்க வயிரவா
உதிரபலி உடனே தருகின்றேன் இரத்தப்பலி
இப்போது தருகின்றேன் சிறிமுக வயிரவா செல்லு செல்லு
சிவனாணைச் செல்லு சிவசக்தியாணை தாக்கு தாக்கு
களுத்தால் இரத்தம் களுக்கெனப் பாயமூக்கால் ரெத்தம்
முத்துப்போல் ஓட நெஞ்சத்தால் ரெத்தம்
நீரெட்டோட விட்டு விடாதே சிறிமுக
வயிரவா அடி அடி பிடி பிடி சிவசக்தியாணை
சிறிங்க வயிரவா தடையற முறிய பேசுவாக

*ஒத்தக் காலில் நின்று சிவம் பண்ணி வெட்டவும்*

பிள்ளையார் அகவல்
வயிரவர் காவியப்பாடல்
முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதரவெளியீடுகள் ஆக்கதொகுப்பு நூல்களும்

| | |
|---|---|
| திருப்புகழ் | 255. 00 |
| கந்தர் அனுபூதி அலங்காரம் | 175. 00 |
| பட்டினத்தார் பாடல்கள் | 235. 00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 135. 00 |
| ஆதிமூலகெருடப்பத்து | 120. 00 |
| உகந்தை முருகன் பாமாலை | 110. 00 |
| திருக்கோயில் முருகன் போற்றிமாலை | 115. 00 |
| திரு மண்டூர் முருகன் பாமாலை | 110. 00 |
| வெருகல் முருகன் போற்றி பாமாலை | 115. 00 |
| புயல் காவியம் | 100. 00 |
| பாத நடையின் மகிமைகள் | 120. 00 |
| சனி பகவான் தோத்திரம் | 110. 00 |
| சிவசெந்திமாலை | 80. 00 |
| பேச்சியம்மன் காவியம், கும்மிப்பாடல் | 150. 00 |
| வயிரவர் அகவல் காவியப் பாடல் | 130. 00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு -01B
077-6538667

விலை -130/=

விக்டர் அச்சகம் கல்முனை - 0771597347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org